1st April 1955]

SRI S. RAMALINGAM :—" கைத்தறியினால் நெய்யப்படும் துணிகளின் விற்பனைக்கு சர்க்கார் இரண்டணா ரிபேட் கொடுத்து கைத்தறி வேலை செய்யும் தொழிலாளிகளின் வாழ்க்கையை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதேபோல கைத்தறியினால் நெய்யப்படும் ஜமக்காளங்களுக்கும் செஸ் நிதியிலிருந்து வசதி செய்து கொடுத்தால் அவர்களுக்கும் உதவியாக இருக்கும். கைத்தறியின் மூலம் நூல்புடவை நெய்பவர்களுக்கும் ஜமக்காளம் நெய்பவர்களுக்கும் அதிக வித்தியாசம் இருக்கமுடியாது. கைத்தறியின் மூலம் ஜமக்காளம் நெய்பவர்களின் வாழ்க்கையையும் புனரமைப்பதற்கு செஸ் நிதியிலிருந்து பணம் ஒதுக்க மத்திய சர்க்காருக்கு ராஜ்ய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறார்களா ? அப்படி சிபாரிசு செய்திருந்தால் தாமதமின்றி இந்தத் தொழிலாளிகளுக்கும் உதவி கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதே அபிப்பிராயத்துடன் தான் மத்திய சர்க்கார் அங்கீகாரத்தை இந்த அரசாங்கம் கோரியிருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன்."

SRI B. K. NALLASWAMI :—" ஜமக்காளக் கூட்டுறவு சங்கங்கள் ஒன்றிரண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தும் போதிய பண வசதி இல்லாததினால் சரியாக நடப்பது இல்லை. நம் ராஜ்யத்தில் பத்தாயிரம் ஜமக்காளம் நெய்யும் தறிகள் இருக்கின்றன. அவைகளில் சுமார் ஆறாயிரம் ஜமக்காளத் தறிகள் பவானி தாலூகாவில் மட்டும் இருக்கின்றன. அவற்றில் சுமார் 100 தறிகள் மட்டும் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்திருக்கின்றன. ஆகையால் இன்னும் அதிகமான தறிகளை கூட்டுறவு சங்கத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளுவதற்கு பண உதவி செய்யய சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" ஜமக்காளக் கைத தொழிலுக்கு பவானி பேர்போனது என்பது எனக்குத் தெரியும். மத்திய சர்க்காரின் அங்கீகாரம் கிடைத்த பிறகு எவ்வளவு தூரம் இந்தத் தொழிலின் அபிவிருத்திக்கு உதவி செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்யலாம்."

SRI M. KALYANASUNDARAM :—" ஜமக்காளம் நெய்வதும் கைத்தறியின் மூலமாகத்தான். கைத்தறித் தொழிலுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் ' செஸ் ' நிதி ஏற்படுத்தப்பட்டது. அப்படியிருக்கும்போது ஜமக்காளம் நெய்யக்கூடியவர்களுக்கு செஸ் நிதியிலிருந்து உத்வி அளிக்கக்கூடியவகையில் மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறதா ? முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால் ஜமக்காளம் கைத்தறி தானா இல்லையா என்ற சந்தேகம் முதலில் நம்முடைய சர்க்காருக்கு எழுந்ததா அல்லது மத்திய சர்க்காருக்கு எழுந்ததா என்று அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" சற்று முன்பு கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கம் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொன்னேன். அதே அபிப்பிராயத்தைத்தான் இந்த அரசாங்கம் முன்னிருந்தே சொல்லிவருகிறது. ஆகவே, திருப்பித் திருப்பி கேட்கவேண்டிய அவசியம் இல்லை. செஸ் நிதியை மத்திய சர்க்கார் நிர்வகிக்கிறது. அவர்களுடைய அங்கீகாரத்தைப்பெற்றுத்தான் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றியாகவேண்டும். அதற்கு அங்கீகாரம் வேண்டியிருக்கிறது. அதைக் கோரியிருக்கிறோம்."

Posting of Reserve Police at Pennadam.

* 1764 *Q.*—SRI M. KATTIMUTHU : Will the Hon. the Minister for Finance be pleased to state the reasons for sending Reserve Police to the Pennadam, Eraiyur, Kothattai and Hariheri villages of Vridhachalam taluk on the 17th November 1954?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" On the 17th November 1954, two sections of the Armed Reserve were sent to the

[1st April 1955

Pennadam Police Station in Vridhachalam taluk as breach of the peace was apprehended in Pennadam and the surrounding villages owing to Kisan trouble in Pennadam. The Armed Reserve Party was withdrawn to District Headquarters on the 24th November 1954, when the situation improved and became peaceful.''

SRI M. KATTIMUTHU :—" விவசாயிகள் கூலி கேட்டால் அதற்குக் கிசான் தகராறு என்று தான் அர்த்தமா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" விவசாயிகள் கூலி கேட்டதினால் ஏற்பட்ட தகராறு அல்ல. கிசான் தகராறு என்று சொல்லிக்கொண்டு அதற்காக வேறு குற்றங்கள் ஏற்பட்டன. அதைப் பற்றி கோர்ட்டில் கேஸ் தாக்கலாகியிருப்பதனால் பூரா விவரமும் சொல்லமுடியாமலிருப்பதற்கு நான் வருந்துகிறேன்."

SRI M. KATTIMUTHU :—" உண்மை ஒருபுறமிருக்க கீழ்தர அதிகாரிகள் சொல்வதை சரியென்று சர்க்கார் ஒப்புக்கொள்ளுவது முறையாகுமா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" கீழ்தர அதிகாரிகள் சொல்வதை சர்க்கார் அப்படியே ஒப்புக்கொண்டுவிடுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. இந்த விஷயம் கோர்ட்டில் விசாரணையில் இருப்பதால் கோர்ட்டு முடிவுக்கு வரும்வரையில் சர்க்கார் எதுவும் செய்வதற்கில்லை. கோர்ட்டு முடிவு தெரிந்த பிறகு தான் சர்க்கார் இதில் ஒரு முடிவுக்கு வரமுடியும்."

Local Fund Hospital, Sirkali.

* 1765 *Q.*—SRI A. RAMASWAMI TEVAR (on behalf of Sri C. Muthiah) : Will the Hon. the Minister for Health be pleased to state the action taken on the representation pending with the Government from 1952 from the Panchayat Board of Sirkali and the general public, for the transfer of the Local Fund Hospital at Sirkali to Government management?

THE HON. SRI A. B. SHETTY :—'' No representation in the matter is pending from 1952 with the Government. The Director of Medical Services had recommended the provincialisation of the Local Fund Hospital, Sirkali, in connection with the Part II scheme proposals for 1953–54 and 1954–55; but the recommendation was not approved.''

SRI S. THINAKARASAMI THEVAR :—'' May I know from the Hon. Minister what procedure is adopted in the matter of transfer of Local Fund Hospital to Government management? ''

THE HON. SRI A. B. SHETTY :—'' The taluk headquarters hospitals in those districts where the Boards have deficit budgets are given preference in being transferred to Government management.''

National Extension Service in Tanjore district.

* 1766 *Q.*—SRI S. RAMALINGAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the expenditure incurred so far on the National Extension Service in Tanjore district;

(*b*) the progress made thereunder; and